பக்கங்கள்:-22

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 31 | சனிக்கிழமை | 14.06.2025 | அதிர்வு 314 |
|---|---|---|---|---|---|

## ஜூன் 25ஆம் திகதி யாழ். வருகின்றார் ஐ.நா. ஆணையாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 25ஆம் 06



யாழ். மாநகர சபையைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியது போல்

# கொழும்பு மாநகர சபையில் திங்களன்று ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்

### இப்படிக் கூறுகின்றார் கயந்த கருணாதிலக எம்.பி.

யாழ்ப்பாணம் மாநகர சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியது போல் கொழும்பு மாநகர சபையில் எதிர்வரும் திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். 06



# பதற்றத்தைத் தணிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள்

### இஸ்ரேல் மற்றும் ஈரானிடம் இலங்கை வேண்டுகோள்

இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளையும் நிதானத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறும், பதற்ற நிலையைத் தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையிலான சமீபத்திய பதற்றங்கள் தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் வெளிவிவகார அமைச்சு, அவ்விரு நாடுகளிலும் உள்ள இலங்கைத் தூதரகங்களின் நிலைமையை 06






யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர் தேசம் மீது பெரும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்களில் ஈடுபட்ட படைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கொழும்பு அரசு தொடர்ந்தும் மறுத்து நிற்கையில், அந்த அரசின் தலைவர்கள் மேற்குலக நாடுகளுக்கு விஜயம் செய்யும்போது அங்கு புகலிடத் தமிழர்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

கடந்த கால் நூற்றாண்டாக நீடிக்கும் இந்த போக்கிலிருந்து தாமும் தப்ப முடியாது என்பதை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தமது தற்போதைய ஜேர்மன் விஜயத்தின் போது நன்கு உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்பலாம்.

கடந்த வியாழக்கிழமை பேர்லினில் இலங்கை ஜனாதிபதி மூத்த ஜேர்மன் தலைவர்களைச் சந்தித்தபோது தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பாரிய அட்டூழியங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று கோரிக்கைகளுடன் 06



# சிறைச்சாலை அத்தியட்சகர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கைது செய்யப்பட்டுள்ள அனுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்ன எதிர்வரும் 23ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பை முறைகேடாக பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வழக்கு விசாரணைகளுக்காக அவர் நேற்று மீண்டும் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அனுராதபுரம் மேல்நீதிமன்றத்திற்கு மோசடியான ஆவணத்தை சமர்ப்பித்து பிரதிவாதியொருவரை விடுவித்தமை தொடர்பில் அவர் கடந்த 10ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அன்றைய தினம் அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் பிரதம நீதவான் நாலக சஞ்ஜீவ ஜயசூரிய உத்தரவிட்டிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளையும் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் 28 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அவர்கள் சிறைச்சாலைகளில் கைதிகள் விடுவிக்கப்பட்டமை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளனர்.

# அத்தியாவசிய மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது



மத்திய மருந்து சேமிப்பு மையங்களில், சுமார் 180 அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சமில் விஜேசிங்க, இதனைக் குற்றச்சாட்டாக முன்வைத்துள்ளார்.

அதேநேரம், மருத்துவமனைகளுக்குள், சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகள் பற்றாக் குறையாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் சிறுநீரகம் தொடர்பான மருந்துகளும் பற்றாக்குறையாக உள்ளன.

புற்றுநோய் சிகிச்சை மருந்துகளின் பற்றாக்குறை அதிகரித்து வருவதாகவும் விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில்அரசமருத்துவஅதிகாரிகளின், இந்த குற்றச்சாட்டுக்களுக்கு, அரசாங்கம் விரைவில் பதிலளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






# நிகழ்நிலை ஊடாக சேவை வழங்க ஜனாதிபதி நிதியம் நடவடிக்கை

ஜனாதிபதி நிதியத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சகல சேவைகளையும் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் நிகழ்நிலை ஊடாக பெறமுடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் மருத்துவ உதவி வழங்கும் சேவைக்கான விண்ணப்பங்களைக் கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டது.

இந்நிலையில், ஜனாதிபதி நிதியத்தின் ஏனைய சேவைகளையும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வறுமை ஒழிப்பு நிவாரணங்கள், கல்விப் புலமைப்பரிசில், கல்வியில் சிறந்து விளங்கும் பிள்ளைகளுக்கான பாராட்டு, விசேட தேவையுடையோருக்கான நிவாரணங்கள், விபத்துக்களால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணங்கள் உள்ளிட்ட அந்த நிதியத்தின் அனைத்து சேவைகளுக்கும் நிகழ்நிலை ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

அதற்கமைய, இதுவரையில் கொழும்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி நிதியத்தின் சகல சேவைகளையும், அனைத்து பிரதேச செயலகங்களின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி இடைநிறுத்தம்

நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி நேற்று நள்ளிரவு முதல் திருத்தப் பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்டுள்ளது என மின்சாரசபை அறிவித்துள்ளது.

இந்த திருத்தப்பணிகளை முன்னெடுப்பதற்கு ஒரு மாதம் செல்லும் என இலங்கை மின்சார சபையின் ஊடக பேச்சாளர் தம்மிக விமலர்தன தெரிவித்துள்ளார்.

இந்த மின்பிறப்பாக்கியின் செயற்பாடு இடைநிறுத்தப்படுவதால், தேசிய மின் கட்டமைப்புக்கான 300 மெகாவோட் மின்சார பங்களிப்பு இழக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மின் விநியோகத்துக்கு எந்தவித தடையும் ஏற்படாது என இலங்கை மின்சார சபையின் ஊடக பேச்சாளர் தம்மிக விமலர்தன தெரிவித்துள்ளார்.




# வழித்தடத்தை மாற்றியது ஸ்ரீலங்கன் விமான சேவை


மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் போர் பதற்றத்தால் குறித்த பிராந்தியத்தில் சில வான்வெளி மூடப்பட்டுள்ளதன் காரணமாக தங்களது விமானங்களின் வழித்தடத்தை மாற்றியுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

அதன்படி, மோதல் வலயத்தைத் தவிர்ப்பதற்காக லண்டன் உட்படப் பல ஐரோப்பிய நாடுகளுக்கான வழித்தடங்களில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மாற்று வழித்தடத்தில் விமானங்கள் பயணிப்பதால் பயணத்துக்கு அதிக நேரத்தை செலவிட வேண்டிய ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக உதவிகளுக்காக இலங்கையிலிருந்து 1979 என்ற இலக்கத்துக்கும் சர்வதேச நாடுகளிலிருந்து 94 11 777 1979 என்ற இலக்கத்துக்கும் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என ஸ்ரீலங்கன் விமான சேவை அறிவித்துள்ளது.

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் அவதானத்துடன் செயற்படுங்கள்



இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் பதற்றம் தீவிரமடைந்துள்ளமையால் அங்குள்ள இலங்கையர்களை அவதானத்துடன் செயற்படுமாறு இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமால் பண்டார அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், இஸ்ரேலுக்குச் செல்வதற்குத் தீர்மானித்துள்ள இலங்கையர்கள் தங்களது பயணங்களைத் தாமதப்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

இஸ்ரேல் முழுவதும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், இஸ்ரேல் மற்றும் ஈரானில் விமானச் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை அருகில் வைத்திருக்குமாறும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் அறிவுறுத்தியுள்ளார்.




# காங்கேசன்துறை கப்பல் சேவையை மேம்படுத்த இந்தியா மீண்டும் உதவி

நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையே மேற்கொள்ளப்பட்டு வரும் பயணிகள் கப்பல் சேவையை, மேம்படுத்துவதற்காக, இந்திய அரசு மேலும் ஒரு வருடத்திற்கு நிதி உதவியை நீடித்துள்ளது.

இது பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதற்கும் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

உயர்ஸ்தானிகராலய தகவல்படி, இந்திய செயல்திறன் இடைவெளி நிதியளிப்பு பொறிமுறையின் கீழ், இலங்கைக்கு ஆண்டுதோறும் 300 மில்லியன் இந்திய ரூபாய்க்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இது, கடந்த ஆண்டைப் போலவே, முக்கிய செயற்பாட்டு செலவுகளை ஈடுகட்டுவதன் மூலம், கப்பல் சேவையின் மலிவு மற்றும் செயற்பாட்டு நிலைத்தன்மையை உறுதி செய்வதை, இந்த நிதியளிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மீண்டும் கப்பல் சேவை தொடங்கப்பட்டதிலிருந்து, 15,000 க்கும் மேற்பட்ட பயணிகளை, குறித்த கப்பல் ஏற்றிச் சென்றுள்ளது என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர்கள் பெரும் குரல் எழுப்பி ஆவேசத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பெல்லுவ் அரண்மனைக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடினர். அங்கு அநுரகுமார திஸநாயக்கவை ஜேர்மன் அதிபர் பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியர் முறையாக வரவேற்றார். இலங்கை அதிபரின் வாகன அணிவகுப்பு பலத்த பாதுகாப்பின் கீழ் சென்றபோது, 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதி கிடைக்காததைக் கண்டித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

ஜேர்மன் துருப்புக்கள் சம்பிரதாய மரியாதைக்காக கூடியிருந்தபோது, அரண்மனை வளாகம் முழுவதும் தமிழர்களின் முழக்கங்கள் எதிரொலித்தன. இலங்கையின் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள் மற்றும் பொறுப்புக் கூறலை வழங்கத் தவறியமை குறித்து அநுரகுமார திஸநாயக்கவுக்கு கடும் அழுத்தத்தைக் கொடுக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஜேர்மன் அரசாங்கத்தை வலியுறுத்திய பின்னணியில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

“இலங்கை மற்றும் ஜேர்மனி இரண்டும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டுள்ளன. ஆனால் அதிபர் பிரீட்ரிக் மெர்ஸ் பேர்லின் வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் எழுப்ப வேண்டிய முக்கிய மனித உரிமைகள் கவலைகள், பல தசாப்தங்களாக நீடிக்கின்றன.” – என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜேர்மனிக்கான இயக்குனர் பிலிப் ஃபிரிஷ், இலங்கை ஜனாதிபதி வருகைக்கு முன்னதாக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

திஸநாயக்கவினதும் உட்பட அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள், போர்க்குற்றங்களில் தொடர்புடைய மூத்த அதிகாரிகளைப் பாதுகாத்து, நீதியை முன்னேற்றுவதற்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் முயற்சிகளைத் தடுத்தன என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது.

யுத்த காலக் கொடூரங்களுக்குப் பொறுப்பு கூறுதல், அவற்றை ஒட்டி நீதியை நிலை நாட்டுதல், நல்லிணக்கத்தை உருவாக்குதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்துதல், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கமான முடிவை எட்டுதல் போன்றவற்றை நிறைவேற்றும் வரை இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொருவரும் மேற்குலகுக்கு விஜயம் செய்யும் போது ஈழத் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்வது தவிர்க்க முடியாத நெருக்கடியாகவே நீடிக்கும்.

## கொழும்பு மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“யாழ்ப்பாணம் மாநகர சபையைக் கைப்பற்ற தேசிய மக்கள் சக்தி வகுத்த இரகசிய வியூகம் தவிடுபொடியாகியுள்ளது. தோல்விப் பயத்தில் தேசிய மக்கள் சக்தியில் இருந்து மேயர் பதவிக்கு எவரும் போட்டியிடவில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட தரப்பினருக்கும் தேசிய மக்கள் சக்தியினர் ஆதரவு வழங்கவும் இல்லை. நடுநிலை என்ற பெயரில் தேசிய மக்கள் சக்தியினர் பின்வாங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஐக்கிய மக்கள் சக்தி உட்பட மூன்று கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. அதே போல் கொழும்பு மாநகர சபையிலும் சில கட்சிகளின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.” – என்றார்.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை எந்தவொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் பெறவில்லை.

எனினும், அறுதிப் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குரிய ஆதரவு பெறப்பட்டுவிட்டது என தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. மறுபுறத்தில் எதிரணிகளை ஒன்றிணைத்து ஆட்சியமைப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முயற்சித்து வருகின்றது.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பது தொடர்பான கூட்டத் தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

## ஜூன் 25ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று உறுதியான வகையில் அறியமுடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார். நான்கு நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். இதன் ஒரு பகுதியாகவே, அவர் யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 25ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்பினரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். அத்துடன், இறுதிப்போரில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் தொடர்பிலும் அவர் ஆராய்வார் என்று தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுத் தொடர்பில் எதிர்வரும் செப்டெம்பர் மாத அமர்வில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆதலால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் யாழ்ப்பாணம் வருகின்றமை முக்கியத்துவம் மிக்க விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

## பதற்றத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

அத்தோடு அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைப் பிரஜைகளுடன் தொடர்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சு, அவர்களை மிகுந்த எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இருநாடுகளிடமும் நிதானத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறும், பதற்ற நிலையைத் தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.











# ஜனாதிபதி அநுரகுமாரவுடன் ஜேர்மன் அமைச்சர் சந்திப்பு

ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று பிற்பகல் பெர்லினின் வெல்டொப் எஸ்டோரியா ஹோட்டலில் ஜேர்மன் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ரீம் அலபலி–ரடொவனை சந்தித்து கலந்துரையாடினார்.

உலகளாவிய புதிய பொருளாதாரப் மாற்றங்களின்போது இரு நாடுகளும் எதிர்நோக்கும் பொதுவான சவால்கள் தொடர்பாக இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தக் கூடிய துறைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் நீண்ட வரலாற்றை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் போன்ற தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கும் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளின் முன்னேற்றத்திற்காகவும் ஜேர்மனி வழங்கும் பங்களிப்புக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். அந்தப் பங்களிப்புகள் மற்றும் ஆர்வத்தையும் எதிர்காலத்தில் பரஸ்பரம் நன்மை பயக்கும் வகையில் மேம்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த நிகழ்வில், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குணரத்ன உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.


















# ஜனாதிபதி தலைமையில் ஜேர்மன் வர்த்தக மன்றம்

ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் ஏற்பாடு செய்த வர்த்தக மன்றம் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இங்கு தலைமை உரை ஆற்றிய ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதார மாற்றம், முதலீட்டு வாய்ப்புகள், இலங்கையின் அபிவிருத்தி திறன்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் புதிய வர்த்தக உறவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்து தனது கருத்துகளைத் தெரிவித்தார்.

குறிப்பாக தற்போதைய உலகளாவிய பொருளாதாரப் போக்குகளின்போது, இலங்கை எடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் உரையில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

“இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைத்தல்: பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள்” என்ற தலைப்பில் இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் உரை நிகழ்த்தினார்.


இங்கு ஜெர்மன் நிறுவனங்களால், உற்பத்தி மூலங்கள், மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, சுற்றுலாத் துறை, விநியோகம் மற்றும் போக்குவரத்து,தொழில் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இதற்காக Siemens Energy, Continental AG, GTAI, Giesecke+Devrient GmbH போன்ற உயர் மட்ட ஜெர்மன் நிறுவனங்கள் பங்கேற்றன.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ராஜாவுக்கேற்ற மந்திரி!

‘வீடு எரிக்கின்ற ராஜாவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுக்கின்ற மந்திரி’ என்பார்கள். அந்த மாதிரி இலங்கையில் நிர்வாகச் சீர்கேடுகள், முறைகேடுகள், மோசடிகள், ஊழல்கள் போன்றவற்றில் ஈடுபட்ட அரசு தலைமைகளுக்கு அந்தந்தச் சமயங்களில் எல்லாம் ‘கொள்ளி எடுத்துக் கொடுக்கின்ற மந்திரி’ போல பொருத்தமான சட்டமா அதிபர்கள்தான் பதவியில் இருந்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான பண்ட வரியை சீனி இறக்குமதி விடயத்தில் கிலோ கிராமுக்கு 50 ரூபாவிலிருந்து வெறுமனே 25 சதமாக திடீரென - சடுதியாக - திடுதிப்பென - குறைத்தது அரசு. ஆனால் வெளிச்சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட சீனியின் விலை, வரிக் குறைப்புக்கு ஏற்ப குறைக்கப்படவே இல்லை. இதனால் அந்த இரண்டு, மூன்று மாத காலகட்டத்தில் பெருந்தொகையில் சீனியை இறக்குமதி செய்த வர்த்தகர்கள், முன்னைய கூடிய நிர்ணய விலையிலேயே, வரி குறைக்கப்பட்ட சீனியை விற்றதன் மூலம் கிலோவுக்கு ஐம்பது ரூபா என்ற அடிப்படையில் மேலதிகமாக கொள்ளை லாபம் சம்பாதித்தனர். அரசாங்கத்துக்கு இதனால் 1,600 கோடி ரூபாவுக்கும் குறையாத நஷ்டம் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டது.

இந்த நடவடிக்கையில் எந்த குற்றமும் இடம் பெறவில்லை என்று சட்டமா அதிபர் முடிவு செய்திருந்தார் என குற்றப்புலனாய்வுத் துறை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றது.

ஆயினும், இந்த வரிக் குறைப்பு தொடர்பாக எந்தவொரு தரப்பினரோ அல்லது தனிநபரோ தேவையற்ற நன்மையைப் பெற்றுள்ளார்களா அல்லது லஞ்சம் அல்லது ஊழல் செயல்களைச் செய்துள்ளார்களா என்பதைத் தீர்மானிக்க மேலும் விசாரணைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்று மட்டும் இப்போது கூறப்படுகின்றது.

2020 அக்டோபர் 13 நள்ளிரவில் நடைமுறைக்கு வந்த சீனி வரிக் குறைப்பின் நன்மை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டதா அல்லது சில தனிநபர்கள் அல்லது குழுக்களால் தவறாகப் பெறப்பட்டதா என்பது குறித்து நடைபெற்று வரும் விசாரணைகள் தொடர்பான நடவடிக்கைகளின் போதே இந்தத் தகவல் மேலதிக நீதுவான் கெமிந்த பெரேரா முன் சமர்ப்பிக்கப்பட்டது.

வரி குறைப்பின் முடிவெடுக்கும் செயல்பாட்டில் எந்த குற்றவியல் தவறும் அடையாளம் காணப்படவில்லை என்றாலும், கொள்கை முடிவு தொடர்பாக யாராவது சட்டவிரோத நன்மை, லஞ்சம் அல்லது ஊழல் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டார்களா என்பதைக் கண்டறிய சட்டமா அதிபர் மேலும் விசாரணைகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் எனக் குற்றப்புலனாய்வுத் துறை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தை ஒட்டி பரிந்துரை வழங்கிய சட்டமா அதிபர், வெறுமனே சட்ட தொழில்நுட்பத்தோடு விடயங்களை கையாண்டு, ஆட்சித் தரப்பின் பொறுப்பை - கடப்பாட்டை - சமாளிக்க முற்படுகின்றார்என்றேதோன்றுகின்றது.

ஏற்கனவே இவ்வாறு சீனி வரிக் குறைப்பை பயன்படுத்தி பெரும் ஊழல், மோசடி இடம்பெற்றிருப்பதாக தெரிவித்து, தற்போதைய அரசின் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி சார்பில் முன்னர் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த விடயம் தொடர்பில் சுனில் ஹந்துனெத்தி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகி உயர் நீதிமன்றத்தில் முன்வைத்த சமர்ப்பணங்களின் அடிப்படையில் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த விசாரணையின் முடிவில் இவ்வாறு அதிரடியாகப் பெரும் வரிக் குறைப்பை செய்துவிட்டு, சீனியின் நிர்ணய விலையை குறைக்காமல் இருந்தமை மூலம் அச்சமயத்தில் சீனி இறக்குமதியில் ஈடுபட்ட பெரும் முதலாளிமார் பெரும் தொகைப் பணத்தை சுருட்டிக் கொள்வதற்கு அரசு நிர்வாகம் ஒத்துழைத்ததா என்ற விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றம் ஒரு தீர்மானத்தை எடுக்கும் என எதிர்பார்க்கலாம். அப்போது இவ்விடயத்தில் தொழில்நுட்ப விளக்கங்களை சட்ட ரீதியாகத் தந்து அப்போதைய ஆட்சித் தரப்பைக் காப்பாற்ற முனைந்த சட்டமா அதிபரின் சீத்துவம் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம்.






# ஜேர்மன் சுற்றுலா பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு; இலங்கையில் சுற்றுலா முதலீடு செய்யுமாறு அழைப்பு

ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, நேற்று முற்பகல் பேர்லினின் வெல்டொர்ப் எஸ்டோரியா ஹோட்டலில் ஜேர்மனியின் சுற்றுலா மற்றும் பயணத் தொழில் சங்கங்கள் மற்றும் வெளிச்செல்லும் பயணம்ஃசுற்றுலாத்துறை செயற்பாட்டாளர்கள் உடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டார்.

இலங்கையில் நிலைபேறான சுற்றுலாத் துறைக்காக அரசாங்கம் எடுத்துள்ளசாதகமானநடவடிக்கைகள்குறித்து இங்குதெளிவுபடுத்தியஜனாதிபதி, விசேடமாக சுற்றுலா வசதிகளை அதிகரித்தல், ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி, நிலைபேறான சுற்றுலா பொறிமுறைகள் மூலம் இலங்கை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது என்றும் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையில் மனித வளங்களைமேம்படுத்துதல், சுற்றுலாப்பயணிகளின் ஈர்ப்பை அதிகரித்தல், கலாசார மற்றும் சூழல்சார் சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதற்காக முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் நாடுகளில் ஜெர்மனி தற்போது 4 ஆவது இடத்தில் உள்ளது.

2024 ஆம் ஆண்டில் 136,000 ஜெர்மன் சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன், இந்த ஆண்டு மே மாதம் வரை அந்நாட்டு சுற்றுலாப் பயணிகள் 69,000 பேர் இங்கு வருகை தந்துள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜெர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.
















# பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுறுத்துவோம்; பருத்தித்துறையில் விழிப்புணர்வு நடைபவனி

“பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுறுத்துவோம்” என்னும் தொனிப்பொருளில் பருத்தித்துறையில் விழிப்புணர்வு நடைபவனியும் வீதி நாடகமும் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் அதன் அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு, காலை 8:30 மணிக்கு பாடசாலையில் இருந்து ஆரம்பமாகி முதலாம் கட்டை சந்தி வழியாக பிரதான வீதி ஊடாக பருத்தித்துறை நகரை அடைந்து அங்கிருந்து விநாயக முதலியார் வீதி வழியாகமீண்டும்பாடசாலையைமுற்பகல் 11.00 மணியளவில் வந்து சேர்ந்தது.

இதில் பிளாஸ்டிக் மாசுபாட்டை எடுத்தியம்பும் பதாதைகளை தாங்கி இருந்ததுடன் விழிப்புணர்வு வீதி நாடகமும் இடம்பெற்றது. மாணவர்களுக்கு ஆதரவாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர், நகரசபையினர்,வர்த்தகர்கள், பொதுமக்கள், வங்கியாளர்கள், அயற் பாடசாலையினர் கிராம அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்கவும் கலந்து கொண்டிருந்தார்.











# அகமதாபாத் விமான விபத்து: கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டது

விமானம் விபத்துக்குள்ளான பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதியின் உணவகக் கட்டட கூரையிலிருந்து கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டதாக விமான விபத்து புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு நேற்று முன்தினம் மதியம் 1.38 மணிக்குப் புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787 விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். விமானத்தில் பயணித்த குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் உயிரிழந்துள்ளார் என  அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த விபத்து தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காக தேசிய புலனாய்வு அமைப்பின் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்தனர். அவர்கள் மட்டுமின்றி, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உள்ள விமான விபத்து புலனாய்வுப் பணியகமும், விபத்து குறித்து விசாரணையைத் தொடங்கியது.

விபத்துக்குள்ளான ஏர் இந்தியா 171 விமானத்தின் கறுப்புப் பெட்டியை தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தற்போது அது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானம் விபத்துக்குள்ளான பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதி உணவகக் கட்டடத்தின் கூரையிலிருந்து கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டுள்ளதாக விமான விபத்து புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது. விமானம் பறக்கும் போது அது பற்றிய தகவல்களைப் பதிவு செய்யும் ஒரு சிறிய சாதனமான இந்த கறுப்புப் பெட்டியை ஆய்வு செய்வதன் மூலம் விபத்துக்கான காரணங்களை கண்டறிய முடியும்.

கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பற்றி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு,



“விமானத் தரவுப் பதிவுக் கருவி (கறுப்புப் பெட்டி) அகமதாபாத்தில் விபத்து நடந்த இடத்திலிருந்து 28 மணி நேரத்திற்குள் யுயுஐடீ ஆல் மீட்கப்பட்டது. இது விசாரணையில் ஒரு முக்கியமான படியை குறிக்கிறது. இது சம்பவம் குறித்த விசாரணைக்கு கணிசமாக உதவும்.” என்று தெரிவித்துள்ளார்.

விமானத்தின் வால் பகுதியில் கறுப்பு பெட்டி பொருத்தப்பட்டு இருக்கும். விமானிகள், ஊழியர்களின் உரையாடல்கள் அனைத்தும் இதில் பதிவாகும். விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், திசை, காலநிலை உள்ளிட்ட தகவல்களும் பதிவாகும். பெரும் தீ விபத்து, கடலில் மூழ்கினாலும் கறுப்பு பெட்டிக்கு பாதிப்பு ஏற்படாது. இதில் பதிவான தகவல்கள் மூலம் விமான விபத்துக்கான காரணம் தெரிய வரும்.

இதற்கிடையில், போயிங் 787-8 மற்றும் -9 விமானங்களில் கூடுதல் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஏர் இந்தியா நிறுவனத்திற்கு சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டி.ஜி.சி.ஏ)உத்தரவிட்டுள்ளது. ஜென்க்ஸ் என்ஜின்கள் பொருத்தப்பட்ட அனைத்து போயிங் 787-8 மற்றும் -9 விமானங்களிலும், புறப்படுவதற்கு முன் சோதனைகள் உட்பட கூடுதல் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு டி.ஜி.சி.ஏ. ஏர் இந்தியா நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

# அகமதாபாத் விமான விபத்து பகுதியில் பிரதமர் மோடி நேரில் சென்று ஆய்வு

## காயமடைந்தோருக்கு நேரில் ஆறுதல்







அகமதாபாத் விமான விபத்துப் பகுதியை பிரதமர் நரேந்திர மோடி நேற்று காலைநேரில்ஆய்வுசெய்தார்.தொடர்ந்து அவர் விமான விபத்தில் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதோடு, குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

விமான விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்ட பிரதமர் நரேந்திர மோடி, பேரழிவு நடந்த இடம் வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

விபத்து நடந்த இடத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு, குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் உள்ளிட்டோர் நேற்று ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி நேற்று காலை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். அவருடன் ராம் மோகன் நாயுடு, பூபேந்திர படேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர். விமானம் எவ்வாறு மோதியது என்பது தொடர்பாக ராம் மோகன் நாயுடு, பிரதமருக்கு விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, விமான விபத்தில் உயிர் பிழைத்த ஒரே பயணியான விஷ்வாஷ் குமார் ரமேஷை, மருத்துவமனைக்கு சென்று பிரதமர் மோடி நலம் விசாரித்தார். விபத்து தொடர்பாக அவர் கூறியதை கேட்டறிந்தார். மேலும், விமானம் மோதிய இடத்தில் இருந்ததால் காயமடைந்த மருத்துவக் கல்லூரி விடுதி மாணவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து ஆறுதல் கூறினார்.

விமான விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்ட பிறகு பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“அகமதாபாத்தில் விபத்து நடந்த இடத்தைபார்வையிட்டேன்.பேரழிவுநடந்த இடம் வருத்தமளிக்கிறது. விபத்துக்குப் பிறகு அயராது உழைக்கும் அதிகாரிகள் மற்றும் குழுக்களை சந்தித்தேன். கற்பனை செய்ய முடியாத இந்த துயரத்தில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் எங்கள் எண்ணங்கள் தொடர்ந்து உள்ளன.” என தெரிவித்துள்ளார்.

பிரதமர்வெளியிட்டமற்றொருபதிவில், “அகமதாபாத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் நாங்கள் அனைவரும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். இவ்வளவு திடீரெனவும், இதயத்தை உடைக்கும் வகையிலும் பல உயிர்களை இழந்தது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. அவர்களை இழந்து வாடும் அனைத்து குடும்பங்களுக்கும் இரங்கல். அவர்களின் வலியை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் அந்த வெற்றிடம் வரும் பல ஆண்டுகளுக்கும் நீடிக்கும் என்பதையும் அறிவோம். ஓம் சாந்தி.” என தெரிவித்துள்ளார்.

# வான் பரப்பை மூடியது ஈரான்




மறுஅறிவித்தல் வரை, ஈரான் வான் பரப்பு மூடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் – ஈரான் இடையே அதிகரித்துவரும் பதற்ற நிலையை அடுத்து ஈரான் இவ்வாறு தமது வான் பரப்பை மூடியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏலவே இஸ்ரேல் வான் பரப்பும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அங்கு அவசரகால நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# இஸ்ரேலின் தாக்குதலை அமெரிக்கா ஆதரிப்பதாக ஈரான் குற்றச்சாட்டு

## குற்றச்சாட்டை மறுக்கும் அமெரிக்கா





இஸ்ரேலின் தாக்குதலை அமெரிக்கா ஆதரிப்பதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் அமெரிக்கா இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

அதேநேரம், இஸ்ரேலின் தாக்குதலுக்குப் பதிலளிக்கும் வகையில், நூற்றுக்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்களை ஈரான் ஏவியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அவற்றை தமது வான் பாதுகாப்பு அமைப்புகள் வெற்றிகரமாகத் தடுத்ததாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

# இஸ்ரேலுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும்

## அயதுல்லா கொமெய்னி எச்சரிக்கை



ஈரானைத் தாக்கிய குற்றத்துக்காக,கடுமையான தண்டனையை இஸ்ரேல் எதிர்நோக்க வேண்டும் என ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா கொமெய்னி எச்சரித்துள்ளார்.

ஈரானின் தலைநகர் தெஹ்ரான் மற்றும் அணுசக்தி கட்டமைப்புகள் மீதும், ஷிராஜ் மற்றும் தப்ரிஜ் நகரங்கள் மீதும் இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதல்களில், ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர இராணுவ அதிகாரி ஹுசைன் சலாமி, ஈரான் ஆயுதப்படை தலைவரான ஜெனரல் முகமது பகேரி ஆகியோர் பலியாகினர்.

அத்துடன், ஈரானின் ஏவுகணை திட்டத் தலைவராக செயற்பட்ட அலி ஹஜிஜதேஹாவையும் கொன்றுவிட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இந்தநிலையிலேயே, ஈரான் மீது தாக்குதல் நடத்தி இஸ்ரேல் பெரிய குற்றத்தை செய்துள்ளது.

இதற்காக அந்த நாட்டுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா கொமெய்னி எச்சரித்துள்ளார்.



# நல்லூர் பிரதேச சபையில் புதுயுகம் படைப்போம் புதிய தவிசாளராகப் பொறுப்பேற்ற மயூரன் உரை

எமது சிந்தனை மாற்றங்களால் நல்லூர் பிரதேச சபையில் புதுயுகம் படைப்போம் என சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள பத்மநாதன் மயூரன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் வாழும் இச் சமூக ஒழுங்கில் சவால்களையும் நெருக்கடிகளையும் சந்திப்பது ஒரு சாதாரண விடயம். ஆனால் அவ் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு பயணிக்கும் திசையறிந்து பயணிப்பதே மிகக் கடினமான விடயம்.

அந்தவகையில் அந்த கடினமான விடயத்தினை மீண்டும் ஒரு முறை சாத்தியமாக்கும் வகையில் நல்லூர் பிரதே சபையின் தலைமைப் பதவியினை ஏற்றிருக்கின்றேன். அதற்கு ஆதரவளித்த அத்தனை பேருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள்.

எப்போதும் ஓர் இடத்தில் இருந்து அடுத்த இடத்தினை நோக்கி பயணிப்பதற்கு எமக்கு கிடைத்த பாதை என்பது எமக்கு கிடைக்கின்ற வாய்ப்பு என்பதனையும் தாண்டி, அது எமக்கு கிடைத்துள்ள பொறுப்பு என்பதனை ஏற்றுக் கொள்பவர்களாளேயே நாம் வாழுகின்ற பிரதேசத்தினையும் அதன் மக்களையும் அடுத்தடுத்த படிகளை நோக்கி அழைத்து செல்லக் கூடியதாக இருக்கும்.

அதனை என் நெஞ்சில் நிறுத்தியே 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பயணித்தோம். அதே போலானதொரு சந்தர்ப்பத்தினையும் பொறுப்பினையும் இயற்கை மீண்டும் எமக்கு தந்துள்ளதுடன் கடந்த காலத்தை விட மிக வேகமாகவும் விவேகமாகவும் பயணிக்க வேண்டியதன் தேவையினையும் உணர்த்தி நிற்கின்றது.

அப் பொறுப்பினை சிரமேற்கொண்டு நல்லூர் பிரதேச சபையின் உட்கட்டுமான வசதிகளை மேம்பாடுத்துவதிலும் நல்லூர் பிரதேச சபையினை தூய்மையான அழகிய நகராக மாற்றுவத்திலும் எனது கவனம் இருக்கும். அத்துடன் அப் பிரதேச வாழ் மக்களின் அடிப்படை தேவைகளான திண்மக்கழிவகற்றல், வீதிகள் மின்விளக்குகள், வடிகாலமைப்பு போன்ற பல தேவைகளை முன்னகர்த்துவதற்கும் நல்லூர் பிரதேச சபையினை ஒரு நகர சபையாக மாற்றுவதற்கும் என்னுடைய இந்த காலப்பகுதியில் நான் உங்கள் அனைவருடனும் இறுகக் கைகோர்த்து அயராது உழைப்பேன். இது என் வாக்குறுதி என்பதற்கு அப்பால் என் மனவுறுதியும் கூட.

அண்மைக்காலமாக காரைக்கால் திண்மக்கழிவகற்றல் இடத்தில் நடைபெறுகின்ற சமூக சீர்கேடான மற்றும் சமூக விரோத செயல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றேன்.

எமது கடந்த ஆட்சிக்காலத்தின் இறுதிக் காலகட்டத்தில் அதனை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் குறுகிய காலத்தில் அவை செயல் வடிவம் பெறவில்லை.

இந் நிலையில் நான் மீண்டும் நல்லூர் பிரதே சபையின் தவிசாளராக பதவியேற்றுள்ள இன்றைய நாளிலிருந்து மிக விரைவில் காரைக்கால் திண்மக் கழிவகற்றல் நிலையத்தில் புதிதாக கழிவுகளைக் கொட்டுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படும். அத்துடன் எதிர்வரும் காலங்களில் அங்கிருக்கின்ற கழிவுகள் படிப்படியாக அகற்றப்பட்டு அப்பிரதேசத்தின் தன்மை பாதுகாக்கப்படுவதுடன் காரைக்கால் திண்மக் கழிவகற்றலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அப் பகுதி சபையின் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் என்ற உறுதி மொழியினையும் இங்கு தருகின்றேன்.

மாற்றத்தையும் ஏற்றத்தையும் வரவேற்றும் எதிர்பார்த்தும் நடந்து முடித்த தேர்தலில் நம்பிக்கையுடன் எமக்கு ஆதரவளித்த அத்தனை பேருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுவதோடு நம்பிக்கையோடு நல்லூர் பிரதேச சபையின் தலைவர் பதவிக்கு என்னை தெரிவு செய்த தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.வினேஸ்வரனுக்கும் எந் நிலையிலும் எல்லாச் சந்தர்பங்களிலும் எனக்கு வழிகாட்டும் ஒரு நண்பனாக இருக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தணி மணிவண்ணனுக்கும் எனது நன்றிகள்.

எந்த ஒரு கட்சி அரசியல் பாகுபாடுமின்றி இச் சபையின் எல்லா கௌரவ உறுப்பினர்களும் தங்களுடைய மக்களைப் பிரதிநிதித்துப்படுத்துகின்றவர்கள் என்பதனை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அனைவருடனும் இணைந்து நல்லூர் பிரசேத்தின் தன்மையறிந்து அதன் மக்களின் மனமனறிந்து தேவையறிந்து ஒற்றுமையாக பணியாற்றுவோம்.

இயற்கை எம் மீது சுமத்தியிருக்கும் இப் பொறுப்பினை நன்குணர்ந்து வரலாற்றினை ஏற்றமிகு ஒன்றாக மாற்றும் தருணமும் இதுவென்று உணர்ந்து கொண்டு எமது மண்ணுக்காகவும் மொழிக்காகவும் எமக்காகவும் இறுதிமூச்சுவரை சுதந்திர வேட்கையுடன் போராடி மனங்களில் நிலைத்து வாழ்பவர்களை நினைவில் நிறுத்தி எமது சிந்தனை மாற்றங்களால் நல்லூர் பிரதேச சபையில் புதுயுகம் படைப்போம். மக்கள் மனங்களில் நம்பிகையினை வளர்ப்போம். - என்றார்.



# திருகோணமலையில் தமிழ்ப் பெண் பிரதிநிதியை தெரிவு செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி

**(எச்.எம் ஹலால்தீன்)**

திருகோணமலை மாநகர சபையில் தமக்குக் கிடைத்த போனஸ் பிரதிநிதிகளில் ஒருவராக கிளரன்ஸ் கிறிட்டன் நஸான் ஜெனிட்டா என்ற தமிழ்ப் பெண்ணை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமித்துள்ளது.

தமிழ் – முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் முகமாக இந்நியமனம் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்க்ச்ப்படுகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் திருகோணமலை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களது சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

திருகோணமலை குளக்கோட்டம் மண்டபத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர் தலைமையின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் உதுமா லெப்பை, திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 23 உறுப்பினர்கள் தமது சத்தியப்பிரமாணத்தௌ இதன் போது செய்து கொண்டனர்.









# நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது இயந்திரம் நேற்றுடன் நிறுத்தம்!

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

நுரைச்சோலையில் உள்ள 3ஆவது மின் உற்பத்தி நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் பழுதுபார்ப்பு பணிகளுக்காக நிறுத்தப்படும் என்று மின்சாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, பழுதுபார்ப்பு பணிகள் 25 நாள்களுக்கு மேற்கொள்ளப்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, தேசிய மின்சார கட்டமைப்பு 300 மெகாவாட் மின் உற்பத்தியை இழக்கும்.

இருப்பினும், 2 மின் உற்பத்தி நிலையங்கள் செயல்பாட்டில் இருப்பதால், மின்சார விநியோகத்தில் எந்த இடையூறும் ஏற்படாது என்று மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

மூன்றாவது மின் உற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் மீண்டும் இணைக்கப்பட்ட பிறகு, நுரைச்சோலை மின் நிலையத்தில் உள்ள முதல் மின் உற்பத்தி நிலையம் பழுதுபார்ப்பு பணிகளுக்கு உட்படுத்தப்பப்பட உள்ளது.

இதற்கிடையில், ஒன்றரை மாதங்களாக பழுதுபார்ப்பு பணிகளுக்கு உட்படுத்தப்பப்பட்டுள்ள களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையம், அடுத்த சில நாள்களில் மின் உற்பத்திக்காக மீண்டும் தேசியக் கட்டமைப்புடன் இணைக்கப்பட உள்ளது.

இது, தேசிய மின் கட்டமைப்புக்கு 165 மெகாவாட் மின் திறனை சேர்க்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்குறுதியளித்த முறைமை மாற்றம் எங்கே? மக்களை ஏமாற்ற வேண்டாம் என்கிறார் சஜித்

தற்போதைய அரசாங்கம் முறைமையில் மாற்றத்தைக் கொண்டுவருவதாக உறுதியளித்திருந்தாலும், இன்று வரை ஜனாதிபதி மன்னிப்பு மூலம் கைதிகளை விடுவிப்பதற்கான முறைமையில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. ஜனாதிபதிக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ தெரியாமல் கைதிகள் விடுவிக்கப்படுகிறார்கள். துறைமுகத்தில் இருந்து 323 சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் கூட விடுவிக்கப்பட்டுள்ளன. முறைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.




ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விடுவிக்கப்படுவது குறித்துக் கூட ஜனாதிபதியும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளும் அறியாதிருக்கும் சந்தர்ப்பத்தில், கொள்கலன் விடுவிப்புக்கு எங்ஙனம் பொறுப்புக்கூற முடியும்? 323 சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் என்பது தெரியாமலா அவை விடுவிக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய பிரச்சினை எழுந்துள்ளது. இந்தக் கொள்கலன்களில் உள்ள பொருள்களுக்கு யார் பொறுப்பு என்பதை வெளிக்கொணர வேண்டியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக சிரேஷ்ட பிரஜைகளினது சேமிப்புகளுக்கான வட்டி விகிதத்தையும் இந்த அரசாங்கம் அதிகரிக்கவில்லை. சகல அரசாங்கங்களும் இவர்களினது சேமிப்புகளுக்கான 15 வீத வட்டியை வழங்கியுள்ளன. ஆனால் இன்று இந்த அரசாங்கத்தின் கீழ் அது கிடைக்காது போயுள்ளது. இங்கும் முறைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொய்யும், மோசடியும் ஏமாற்றுமே நடந்து வருகின்றன. முறைமையில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. மக்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றம் இதுவல்ல. ஆனபடியால் இப்போதாவது நாட்டு மக்களை ஏமாற்றுவதை விடுத்து, யதார்த்தமாக நடந்து கொள்ளுமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம். – என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

# கதிரைக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு நான் குரங்கு மாதிரித் தாவித் திரிபவன் அல்லன்!

## சாணக்கியன் புரிந்துகொள்ள வேண்டும் என ஜனா கருணாகரம் காட்டம்

(கனகராசா சரவணன்)

எனது கட்சியில் இருந்து என்னை இடைநிறுத்துவதற்கு சவால் விடுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் யார்? கதிரைக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு குரங்கு மாதிரி தாவித்திரிபவன் நான் அல்லன் என்பதை சாணக்கியன் புரிந்துகொண்டு ஏனையவர்களை தூற்றுவதை நிறுத்தி, தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.



மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் ரொலே கட்சியின் செயலாளர் கோவிந்தன் கருணாகரம் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் என்னைப் பற்றி உண்மைக்கு பறம்பாக பல அவதூறுகளை வெளிப்படுத்தினார்.

மண்முனை தென் ஏருவில்பற்று பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர் தெரிவில் 20 உறுப்பினர்கள் கொண்ட அந்த சபையில் தவிசாளர் தெரிவு ஓர் இக்கட்டான நிலையில் நடைபெற இருந்தது.

அந்த வகையில் எமது கட்சி உறுப்பினர் திறந்த வாக்கெடுப்பை கோரினார். ஆனால் தமிழரசு கட்சி இரகசிய வாக்கெடுப்பைக் கோரியமையுடன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் தமிழரசு கட்சியுடன் இணைந்து இரகசிய வாக்கெடுப்பை கோரியமையை அடுத்து அங்கு இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற்றது.

எனவே இந்த இரகசிய வாக்கெடுப்பில் யார், யாருக்கு வாக்களித்தார் என யாராலும் ஊகிக்க முடியாது. இருந்தபோதும் எமது கட்சி உறுப்பனர் தேசிய மக்கள் கட்சிக்கு வாக்களித்தார் என்பது எப்படி தெரியும்? அதனை சாணக்கியன் எப்படி உறுதிப்படுத்தினார்? எப்படி என் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்?

இந்த இரகசிய வாக்கெடுப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின்

உறுப்பினர் ஒருவரை உள் வாங்கியது போல தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் ஏன் தமிழரசு கட்சிக்கு வாக்களித்திருக்க முடியாது?

மாவட்டதில் சகல பிரதேச சபைகளிலும் தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஜனநாயக கூட்டமைப்பு வாக்களிக்கவில்லை. மண்முணை ஆரையம்பதி சபையின் தவிசாளர் தெரிவில் ஆதரவாக எமது கட்சி உறுப்பினர் இருந்தார்.

அவ்வாறே வியாழக்கிழமை காலையில் செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாளர் தெரிவின் போது கூட எமது கட்சி உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறசெய்தார்.

செங்கலடி பிரதேச சபைக்கு தவிசாளரை ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்திருந்த போது அங்கு சாணக்கியன் வேறு ஒருவரை தெரிவு செய்ததால் அங்கு குழப்பம் ஏற்பட்டதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையில் இவரால் முன்மொழிந்த உறுப்பினர் தவிசாளர், பிரதி தவிசாளர் தெரிவுக்கு சமுகமளிக்காமல் சுகயீனமாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனவே மண்முணை தென்ஏருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவில் தமிழரசு கட்சிக்கு எமது கட்சி உறுப்பினர் வாக்களித்திருக்கு முடியாது என எப்படி இவர்களுக்கு தெரியும்?

உண்மையில் சாணக்கியன் என்னை தேடிவந்து பேசினார். தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் வினோ, அவ்வாறு மட்டக்களப்பு மாநகரசபை தெரிவு செய்யப்பட்ட முதல்வர், பிரதி முதல்வர் வந்து சந்தித்தனர். ஏன் இறுதி நேரத்தில் நேற்று எம்.சுமந்திரன் என்னுடன் தொலைபேசியல் தொடர்பு கொண்டார். இதன் போது அவர்கள் எல்லோருக்கும் உங்களுக்கு எதிராக வாக்களிக்கமாட்டோம் எனக் கூறவில்லை.

ஆனால் இறுதிவரை சில கோரிக்கைகளை முன்வைத்தோம். ஆனால் அவர்கள் எந்தக் கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்கவில்லை. எந்தவொரு சபையிலும் சேர்ந்து ஆட்சி அமைக்க முன் வரவில்லை. ஆனால் இன்று முஸ்லீம் காங்கிரஸ், சி.வி.விக்கினேஸ்வரந் மற்றும் சஜித் பிரேமதாஸவுடன் ஒப்பந்தம் செய்துள்ளதுடன் டக்கிளஸ் தேவானந்தாவை தேடிச் சென்று ஆதரவு கேட்டுள்ளனர்.

இருந்த போதும் ஜனநாக தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வடக்கு, கிழக்கில் 106 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் எங்களுடன் உடன்பாட்டிற்கு வருவதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஆனால் அவர்களுக்கு வாக்களிக்க கூடிய இடங்களில் வாக்களித்து வருகின்றோம். கடைசிவரை சில கோரிக்கைகள் நிறைவேற்றலாம் என இருந்தோமே தவிர, இவர்களுக்கு எதிராக நாங்கள் செயற்படவேண்டும் என்று இருக்கவில்லை.

எனவே மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர், பிரதி தவிசாள் தெரிவில் திறந்த வாக்களிப்புக்கு கோரியிருந்தால் அந்த உண்மை அவர்களுக்கு தெரிந்திருக்கும். எனவே அதைவிடுத்து தேவையற்ற குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்களை வைப்பதை சாணக்கியன் முதலில் தவிர்க்க வேண்டும்.

இன்று பிரதேச சபைகளை அமைப்பற்கு கூட பணரீதியான மற்றும் வேறு நலன் சார்ந்த பல டீல்கள் நடைபெறுகின்றன. இன்று மாலை பட்டிப்பளை பிரதேச சபைக்கான தெரிவிற்கு நேற்று இரவு 1 மணிவரை ஒரு சில உறுப்பினர்களை சந்தித்து டீல் பேசியுள்ளனர்.

வாழைச்சேனையில் இடம்பெற்ற தவிசாளர் தெரிவில் தமிழரசு கட்சிக்கு எமது உறுப்பினர் வாக்களித்தார். ஆனால் நா.உ. சாணக்கியன் தென் எருவில்பற்று பிரதேச சபையில் நடந்த சம்பவத்தின் பின்னர் நாங்கள் பயந்து தமிழரசு கட்சிக்கு வாக்களித்தோம் எனொ பேசியுள்ளமை விசித்திரமானது.

எனவே இறால் தன்னுடைய தலையில் கழிவை வைத்துகொண்டு நாறுது என கூறுவதைப் போன்று, தங்களுக்குள் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு கட்சியை நீதிமன்றம் கொண்டு சென்று, மக்களை புதினம் பார்க்க வைக்கும் நீங்கள், என்னை எனது கட்சியில் இருந்து இடைநிறுத்துவதற்கு சவால் விடுவதற்கு யார்? என்ன அருகதை இருக்கின்றது? கடசிக்கு மாறாக நான் நடந்தால் எனது கட்சி என் மீது நடவடிக்கை எடுக்கும். நீர் யார் அதைக் கேட்பதற்கு? உம்க்கு அந்த அதிகாரத்தை யார் தந்தது?

43 வருடமாக ஒரே கட்சியில், ஒரே கொள்கையுடன், தமிழ் தேசியத்துக்காக ஆயுத போராட்டமாக இருந்தாலும் சரி, அகிம்சைப் போராட்டமாக இருந்தாலும் சரி, அரசியல் ரீதியாகவும் ஒரே கட்சியில் நான்பயணத்துக்கொண்டிருக்கின்றேன்.

ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். தேசிம் என்றால் என்ன? தமிழ் தேசியம் என்றால் என்ன? போராட்டம் என்றால் என்ன? இந்த போராட்டத்தின் மூலம் ஏற்பட்ட இழப்பு என்ன? தமிழ் மக்களின் தேவை என்ன? – என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் வெறுமனவே கதிரைக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு ஏனையவர்களைத் தூற்றுவதை – விமர்சிப்பதை – விடுத்து.

உங்கள் கட்சியில் இருந்து கட்சிக்கு எதிராக செயற்படுகின்ற நீங்கள் உட்படவர்களுக்கு உங்கள் கட்சியால் நடவடிக்கையை முதலில் எடுங்கள். ஏனைய கட்சியில் என்ன நடக்கின்றது என்பதை எட்டிப் பார்க்க வேண்டாம். – என்றார்.



# உதிரம் கொடுத்து உயிர் காப்போம் இன்று சர்வதேச இரத்ததான தினம்

- த.றவினதாஸ் -
(பொதுச் சுகாதார பரிசோதகர்,
பிராந்திய இரத்த வங்கி, யாழ். போதனா
வைத்தியசாலை)

இன்று உலக குருதிக்கொடையாளர் தினம். அதையொட்டி இந்த கட்டுரை பிரசுரிக் கப்படுகின்றது.

உதிரம் கொடுத்து, நம்பிக்கை கொடுத்து, உயிர் காக்க நாம் ஒன்றிணைவோம்.

உலக சுகாதார ஸ்தாபனம், இரத்த தானம் செய்வோரை சிறப்பிக்கும் முகமாக ஜூன் 14 ஆம் திகதியை, உலக குருதிக்கொடையாளர் தினமாக (World Blood Donor Day) பிரகடனம் செய்து அனுஷ்டித்து வருகிறது.

2004 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வரும் இந்நாள், ABO இரத்த வகையை கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவரான கார்ல் லாண்ட்ஸ்டெய்னெரின் (Karl Landsteiner) பிறந்த நாள் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் இது கொண்டாடப்பட்டு வருகின்றது. இம்முறை "உதிரம் கொடுப்போம், நம்பிக்கை கொடுப்போம், உயிர்காக்க நாம் ஒன்றிணைவோம்" **(Give blood, Give hope: together we save lives)** எனும் தொனிப்பொருளில் குருதிக்கொடையாளர் தினம் சர்வதேச ரீதியாக கொண்டாடப்படுகின்றது.

இத் தினத்தில் உலகளாவிய ரீதியாக தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவரும் குருதிக்கொடையாளர்களும், இரத்ததான முகாம்களை ஒழுங்கமைத்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் ஒழுங்கமைப்பாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இலங்கையிலும் தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினரால் இன்று கொழும்பு அலரி மாளிகையில் உலகக் குருதிக்கொடையாளர் தினம் கொண்டாடப்படுகின்றது. இதில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவரும் குருதிக்கொடையாளர்களும், இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

வடமாகாண பிராந்திய இரத்த வங்கியாகிய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியிலும் தெல்லிப்பளை,பருத்தித்துறை, கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் சாவகச்சேரி இரத்த வங்கிகளிலும் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து சாதனை படைத்த குருதிக்கொடையாளர்களையும்,




இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களையும் எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரி மண்டபத்தில் கௌரவிக்கவுள்ளோம்.

தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை (Cardiothoracic Surgery), சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை (Kidney Transplantation Surgery) மற்றும் நரம்பியல் சத்திர சிகிச்சை (Neuro Surgery) போன்ற பல சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் குருதியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் வடமாகாணத்தில் சிறந்த குருதிமாற்று பிரயோக சேவையை மேற்கொள்ள முடியும்.

எனவே இளைஞர்கள், யுவதிகள் அச்சத்தையும் மூடநம்பிக்கையையும் தவிர்த்து, பெறுமதிமிக்க உயிர்களை காப்பாற்ற குருதிக் கொடையில் ஒன்றிணைய முன்வருமாறு அன்பாக கேட்டுக்கொள்கிறோம்.



# பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்பு மூலப்பொருள்கள் உடப்பு கிராம கரையோரப் பகுதியில் ஒதுங்குகின்றன

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம் உடப்பு கிராம கரையோரப் பகுதியில் பிளாஸ்ரிக்,பொலித்தீன் தயாரிப்பு மூலப் பொருள்கள் பெருமளவு நேற்றுக் கரையொதுங்கிய வண்ணம் காணப்படுகின்றன.

தற்போது வீசும் தென்மேல் பருவக் காற்றின் வேகத்தில் இவை மணி போன்ற வெள்ளை நிற வடிவில் கரையில் ஒதுங்கிக் காணப்படுகின்றன.

இவை மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை. சிறுவர்கள் விளையாட்டாக இதனை எடுத்து பார்ப்பது ,எடுத்துச் செல்வது மிகவும் ஆபத்தானது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை கடல் சூழல் பாதுகாப்பு தரப்பினர் கண்டறிந்து மக்களுக்குத் தகுந்த விளக்கங்களை வழங்கி, அவற்றை மக்கள் எடுத்துக் கையாள்வதைத் தடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கேரளா பகுதியில் விபத்திற்குள்ளான கப்பலில் இருந்த பிளாஸ்ரிக் துகள்கள் மன்னாரில் கரை ஒதுங்குகின்றன

## அவற்றைக் கையாள வேண்டாம் என மக்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்து சமுத்திரத்தின் கேரளா பகுதியிலே விபத்திற்குள்ளான எம்.எஸ். சி.எல்.எஸ்.3 என்கின்ற கப்பலில் காணப்பட்ட பிளாஸ்ரிக் துகள்கள் தற்போது எமது கடற்கரையோர பகுதிகளில் கரையொதுங்குகின்றன. மக்கள் இந்தப் பொருள்களை சேகரிக்காது விழிர்ப்புடன் செயல்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்து சமுத்திரத்தின் கேரளா பகுதியிலே எம்.எஸ்.சி.எல்.எஸ்.3 என்கின்ற கப்பல் கடந்த மாதம் 25 ஆம் திகதி விபத்துக்குள்ளானது.

அந்தக் கப்பலில் காணப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் கொள்கலன்கள் இந்து சமுத்திரத்தில் தற்போது வீசுகின்ற தென்மேல்



பருவப்பெயர்ச்சி காற்றின் காரணமாக நேற்ற. முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் மன்னாரில் சௌத்பார்,கீரி, தாழ்வுபாடு, நடுக்குடா,பழைய பாலம், வங்காலை போன்ற கடற்கரை பகுதிகளில் கரை ஒதுங்கி வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

கரையொதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் கூடுதலாக சுற்றுச்சூழல் ரீதியிலே தாக்கத்தை ஏற்படுத்துவனவாகக் காணப்படுகின்ற நிலையில், கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில், முப்படையினரின் உதவியுடன்,கரை ஒதுங்கியுள்ள பிளாஸ்டிக் துகள்களை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில்,கடலில் மிதந்து வருகின்ற பிளாஸ்டிக் கொள்கலன் மற்றும் பிளாஸ்டிக் துவல்களை மக்கள் சேகரிக்கின்றனர் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்தொ பொருள்கள் சூழல் ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மிதந்து வருகின்ற பொருள்களை மக்கள் கையாள வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தகைய பொருள்களை அவதானித்தால் அதனை மாவட்டச் செயலக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளிடம் தெரியப் படுத்துவதன் மூலம், நாங்கள் மிதந்து வருகின்ற பொருள்களைப் பாதுகாப்பான முறையில் சேகரித்துக் கொள்ள முடியும்.

எனவே மக்கள் இவ்விடயம் தொடர்பாக விழிப்புடன் செயல்பட வேண்டும். தற்போதைக்கு மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என எமக்கு அறிக்கை இடப்பட்டுள்ளது. –என அவர் மேலும் தெரிவித்தார்.





# கிழக்கில் 304 சிறுமிகள் கடந்த ஆண்டில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகினர்!

## தடுக்க ‘சரோஜா’ திட்டத்தை அமுல் செய்கின்றனர் பொலிஸார்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 93 சிறுமிகள் உட்பட கிழக்கு மாகாணத்தில் 16 வயதுக்கு உட்பட்ட 304 சிறுமிகள் 2024 ஆம் ஆண்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை மிகவும் கவலைக்குரியது. பாதுகாப்பற்ற சிறுமிகள் எத்தனையோ பேர் உள்ளனர். எனவே இவர்களைப் பாதுகாப்பதுடன், துஷ்பிரயோகங்களும் தடுக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பாதுகாப்பு எனும் கருத்திட்டத்தின் அடிப்படையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் ‘சறோஜா’ திட்டம் ஆரம்பித்து வைக்கு நிகழ்வு மட்டக்களப்பு சிரேஸ்ட் பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலாரத்தினவின் தலைமையில் காரியாலய மண்படபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற போது இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் குழந்தைகள், பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முதல் காரணமாக அமைபவர்கள் அவர்களுக்கு அருகிலுள்ள உறவினர்கள். அதனால் இவ்வாறான குற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தாய், தந்தையர் பொலிஸ் நிலையத்துக்குச் செல்வதில் பின்னடிப்புக் காட்டுகின்றனர். வெட்கம் மற்றும் கௌரவம் காரணத்தால் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு கிடைப்பதில்லை.

ஒரு பெண் குழந்தைக்கு பாலியஸ் துஷ்பிரயோகம் நடந்த பின்னர் அதனை முறைபாடு செய்வதால் பிரயோசனமில்லை. எனவே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக முன்னர் பாதுகாப்பதுதான் சிறந்தது. அதற்கு முதலில் கிராமம், பிரதேசங்களில் எத்தனை பெண் குழந்தைகள் பாதுகாப்பு இல்லமல் இருக்கின்றார்கள் என கண்டறிய வேண்டும்

சில பிள்ளைகளின் தாயார் வெளிநாடு சென்றிருப்பர். அல்லது தந்தையர் வெளிநாடு சென்றிருப்பார். அல்லது தாய், தந்தையினர் மதுபோதைக்கு அடிமையாகி இருப்பார்கள். இவ்வாறான் குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாதமையால் அவர்கள் இத்தகைய பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பெண் குழந்தைகள் பாதிக்கபடுவதற்கு முன்னர் அவர்களைப் பாதுகாப்பதே இந்த ‘சரோஜா’ திட்டம். எனவே மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலையங்களின் கீழ் உள்ள கிராம சேவர் பிரிவுகளில் இவ்வாறு பாதுகாப்பற்ற குழந்தைகள் எத்தனை பேர் உள்ளனர் எனக் கணக்கு எடுக்கப்பட்டு, அவர்களைத் தொடர்ந்து பாதுகாப்பது தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும். பாலியல் துஸ்பிரயோகம் இல்லாமல் செய்யப்படவேண்டும். ஏன் என்றால் பெண் குழந்தைகளின் எதிர்காலம்அதில்தான் தங்கியுள்ளது. இதற்கு சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், வனிதா சேவா, சிறுவர் உரிமைகள் அமைப்புக்கள், பொது மக்கள் போன்ற தரப்பினர் பொலிஸாருக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். – என்றார்.

கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தரவின் தயாரிக்கப்பட்ட இந்த திட்ட நிகழ்வில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மெண்டிஸ், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பெண்கள் – சிறுவர்கள் பிரிவு பொறுப்பதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், வனிதா சேவா, சிறுவர் உரிமைகள் அமைப்புக்கள் போன்றவற்றின் பிரதிநிதிகள், பிரதேச செயலக சிறுவர் பிரிவு பொறுப்பதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை பொலிஸ் மா அதிபர் வீடியோ மூலமாக இந்த சரோஜா திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றியமை குறிப்பிடதக்கது.





# இன்றைய ராசி பலன்கள் - 14.06.2025




அலுவலகத்தில் அர்ப்பணிப்புடன் வேலை பார்க்க வேண்டும். வெளி எதிரியை விட உள்ளுக்குள் தான் அதிகமான எதிரிகள் உங்களுக்கு இருக்கிறார்கள். வேலை மாறுதல் கிடைத்தால் தவிர்க்க வேண்டாம். ஏனென்றால் இந்த இடத்தை விட அந்த இடம் மிக சிறப்பாக இருக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் கிடைக்கும். ‘இரந்து குடித்தாலும் இனத்தில் குடி’ என்ற பழமொழியை மனதில் வைத்து உறவுகளோடு ஒன்றி போவீர்கள். மனைவி மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துவார். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் மறைந்து மறுமலர்ச்சி ஏற்படும். பிள்ளைகள் விளையாட்டில் ஆர்வம் காட்டுவார்கள். விளையாட்டு எனில் சேர்வதற்காக பெற்றோர்களின் அனுமதி கேட்பார்கள்.




தொழில் சிக்கலை சாமர்த்தியமாக களைய வேண்டும். வழக்கறிஞர் உதவியை நாடி சட்ட சிக்கலில் இருந்து விடுபட வேண்டும். எதிர்ப்புகளை கண்டு கலக்கம் அடைய வேண்டாம். என்னதான் நடக்கும் நடக்கட்டுமே என்று அடுத்த காரியத்தில் இறங்க வேண்டும். உறவினர்கள் சுற்றி நின்று உபத்திரம் தருவார்கள். உறவுகளில் நொந்து போவதை விட ஒரு கட்டு விறகில் வெந்து போகலாம் என்று நினைப்பீர்கள். மனைவியோடு மல்லுக்கட்டி மன நிம்மதி இழப்பீர்கள். நோயோடும் பேயோடும் வாழும் ஞான நிலையை நீங்கள் அடைவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கையை கண்காணிப்பது அவசியம். ‘தென்னைய பெத்தா இளநீரு பிள்ளைய பெத்தா கண்ணீரு’ இதை உணரக்கூடிய காலகட்டம் இது. மகாலட்சுமியை வழிபடுங்கள்.




அலுவலகத்தில் உங்கள் சேவை பாராட்டப்பட வேண்டும். உரிமையோடு செய்கின்ற காரியத்தால் உன்னத நிலையை அடைவீர்கள்.தவறான செயல்களின் மனதை அலைபாய விட வேண்டாம். நல்ல மனதை கெடுத்து விஷ விதையை தூவி உங்களை சிலர் வீழ்த்த நினைப்பார். உறவினர் வீட்டு கல்யாணத்திற்கு பண உதவி செய்வீர்கள். சொந்த பந்தங்களோடு அரவணைத்து செல்ல நினைப்பீர்கள். மனைவியின் ஒத்துழைப்பால் பொருளாதார மேன்மை ஏற்படும். சட்ட மந்திரியாக இருந்து ஒவ்வொரு காரியத்தையும் திட்டமிட்டு செய்வார். வீட்டு நிலை அறிந்து பிள்ளைகள் நடந்து கொள்வார்கள். இரவு நேரத்தில் வெளியே சுற்றுவதை தவிர்க்க வேண்டும். சௌமிய நாராயணப் பெருமாள் வழிபடுங்கள். சங்கடங்கள் தீரும்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




முக்கியமான காரிய நிமித்தமாக வெளியூர் பயணம் செல்வீர்கள். வேலை இடத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்துவீர்கள். தொழிலை சாமர்த்தியமாக நடத்தி லாபத்தை அதிகரிப்பீர்கள். அரசியல்வாதி நண்பரின் உதவியால் ஒரு முக்கியமான காரியத்தை முடிப்பீர்கள். பெண்களுக்கு உதவி செய்யுங்கள் ஆனால் ஒரு எல்லைக்கோட்டை நிர்ணயித்துக் கொள்ள தவறாதீர்கள். உறவினர்களின் ஒத்தாசை உங்களுக்கு கை கொடுக்கும். விவேகமான முறையில் வியாபாரத்தை பெருக்குவீர்கள். மனைவி சேர்த்து வைத்த பணத்தை சிரமத்திற்கு கொடுப்பார். கண்களில் விளக்கெண்ணெயை விட்டு வியாபாரத்தை கவனிக்க வேண்டும். பிள்ளைகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.




தொழிலில் லாபம் அதிகரிக்கும். அதை நீங்கள் நிலை நிறுத்த வேண்டும். சிக்கனமாக இருந்து வங்கி இருப்பை உயர்த்த வேண்டும். முக்கிய கடன்களை அடைக்க வேண்டும். வியாபாரம் உயரும். விசனத்தில் மூழ்க வேண்டாம். லாபத்தை மனை இடங்கள் வாங்கி போடுங்கள். தக்க சமயத்தில் உறவினர் ஒத்தாசையாக இருப்பார். உறவுகளை மேம்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டுவீர்கள். மனைவியின் அன்பு மனத் தைரியத்தை கொடுக்கும். குடும்பத்திலிருந்து குழப்பங்களுக்கு விடிவு பிறக்கும். பிள்ளைகள் நிலை உணர்ந்து நடந்து கொள்வார்கள். கமிஷன் வியாபாரம் தக்க சமயத்தில் உங்களுக்கு கை கொடுக்கும். ஸ்ரீரங்க பெருமாளை வழிபடுங்கள்.




இந்த நேரத்தில் நீங்கள் தொட்டது துலங்கும். கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும். எல்லா வகையிலும் உங்களுக்கு நன்மை உண்டாகும். அதே நேரத்தில்

வேலை பார்க்கும் இடத்தில் வில்லங்கமாக பேச வேண்டாம். அது உங்களுக்கு கெட்ட பெயரை கொண்டு வரும். உறவினர்களுக்கு இடையே மனத்தாங்கல் ஏற்படும். கலகத்தை உண்டு பண்ணி அதில் குளிர்காய நினைப்பார்கள். அதற்கு இடம் கொடுக்க வேண்டாம். குடும்பத்தில் நோய் தாக்கம் ஏற்படலாம். மருத்துவச் செலவு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

பிள்ளைகளுக்கு கல்விக்காக கடன் வாங்குவீர்கள். நீண்ட நாள் எதிர்பார்ப்பு கிட்டத்தில் வந்து கை எட்டாமல் போகலாம். சுந்தர ராஜ பெருமாளை வழிபடுங்கள். வந்த சிக்கல் விலகும்.சித்திரை நட்சத்திரக்காரர்களுக்கு மனச் சுமை அதிகரிக்கும்.




தொழில் உங்கள் கை ஓங்கி நிற்கும். அதை ஒருமைப்படுத்த வேண்டும். எதிர்பாராத நிலையில் உங்களுக்கு தேவையான உதவி வந்து சேரும். வாழ்க்கை வசந்தமாக நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைத்து கையிருப்பு பெருகும். உறவினர்கள் பக்க துணையாக இருந்து பாதுகாப்பார்கள். நீண்ட நாள் நண்பர் வீடு தேடி வந்து உறவை புதுப்பித்துக் கொள்வார். மனைவி கணவனின் மனம் நோகாமல் நடந்து கொள்வார். வாராமல் இருந்த பணம் கைக்கு வந்து மன நிம்மதி ஏற்படும். உங்களைப் பார்த்து மற்ற குடும்பத்தினர் பொறாமைப் படுவார்கள். ஆளுக்கு ஒரு பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டு போகின்ற நிலை மாறும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.06.2025




அலுவலகத்தில் அலுப்பில்லாமல் வேலை பார்க்க வேண்டும். ஆத்திரமும் அவசரமும் அறிவுக்கு சத்ரு என்பதை மறந்து விட வேண்டாம். சோம்பேறித் தனமாக நடந்து கெட்ட பெயர் எடுக்க வேண்டாம். உங்களுக்கு வரவேண்டிய நல்ல வாய்ப்புகள் கைநழுவி போகக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும். நெருங்கிய உறவினருக்கு உதவி செய்வீர்கள். பஸ்ஸில் உள்ள பின் சீட்டும் சொந்தக்காரர்களும் ஒன்று. எந்த நேரத்தில் தூக்கி எறிவார்கள் என்று தெரியாது. மனைவி சிக்கனமாக குடும்ப நடத்தி உங்கள் சிரமத்தை குறைப்பார். வருகின்ற வருமானத்தை மனைவிகையில் கொடுத்துப் பாருங்கள். அது இரண்டு மடங்காகும். பிள்ளைகள் தெளிவாக நடந்து உறுதுணையாக இருப்பார்கள். பக்கத்து வீட்டு பிள்ளைகளை திட்டாதீர்கள். தட்சிணாமூர்த்தியை வழிபடுங்கள். உங்கள் மதிப்பு உயரும்.




எந்த காரியத்திலும் எச்சரிக்கையாக இறங்க வேண்டும். வாய்ப்பு தேடி செல்லும் இடங்களில் உதவிகள் கிடைக்க தாமதமாகும். அடுத்தவர் பேச்சைக் கேட்டு அகலக்கால் வைக்க வேண்டாம். போனில் உங்களுக்கு பரிசு கிடைத்திருக்கிறது என்றால் நம்ப வேண்டாம். இணையதள மோசடி இருப்பதை இழக்க வைக்கும். உறவுகளால் வம்பு வழக்கு உண்டாகும். எதிர்பார்த்த கடனுதவி இழுபறியாக இருக்கும். மனைவியின் ஆசைக்காக கடன் படுவீர்கள். வாகன கடனை செலுத்துவதில் தடுமாற்றம் ஏற்படும். பிள்ளைகளின் செயலால் மனப்பாரம் அதிகரிக்கும். வேலை இடத்தில் மேலதிகாரிகளின் குறைகளுக்கு ஆளாகாதீர்கள்.




கையில் தாராளமாக காசு புரளும். அதை சிக்கனப்படுத்த வேண்டும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து தட்டாமல் பணம் கிடைக்கும். ஆன்லைன் சூதாட்டங்களில் ஈடுபட வேண்டாம். கமிஷன் வியாபாரத்தில் கணிசமான லாபம் பெறுவீர்கள். நிலம் வாங்கி விற்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். எல்லா வகையிலும் உறவினர்கள் ஒத்துழைப்பாக இருப்பார்கள். வீட்டிற்கு புதிய பொருட்கள் வாங்குவதில் முனைப்பு காட்டுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலவி மகிழ்ச்சி மலரும். பிள்ளைகள் குதூகலமாக வீட்டில் வலம் வருவார்கள். இரும்பு வியாபாரத்தில் ஏற்றமுண்டாகும். ஆஞ்ச நேயரை வழிபடுங்கள். ஆசைகள் நிறைவேறும்.




தொழில்துறைகளில் தேவையான பணத்தை முதலீடு செய்ய வேண்டும். வியாபாரத்தை விரிவுபடுத்த தேவை யான அளவு செலவு செய்வீர்கள். காரியம் கைகூடும் நேரத்தை கை நழுவ விட வேண்டாம். தேடிவரும் ஸ்ரீதேவியை ஓடும்படி செய்து விடாதீர்கள்.லாபம் கருதாமல் உறவினர்கள் உதவுவார்கள். அரசு வேலை பார்ப்பவர்கள் பாராட்டும் பதவி உயர்வும் பெறுவார்கள். மனைவியின் முயற்சியால் கணவரின் கடன் தீரும். நண்பர்களின் உதவி நல்ல நேரத்தில் கை கொடுக்கும். பிள்ளைகளின் படிப்பும் விளையாட்டுத் திறனும் அதிகரிக்கும். மலை போல் வந்த துன்பம் பனி போல் விலகும். மதுரை மீனாட்சி அம்மனை வழிபடுங்கள். மாங்கல்ய பலம் அதிகரிக்கும்.

# சாவகச்சேரியில் களவாடப்பட்ட 5 ஆடுகள் துன்னாலையில் மீட்பு

## சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம்





(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம் கடந்த சில தினங் களுக்கு முன்பாக திருடப்பட்ட ஆறு ஆடுகளில் ஐந்து ஆடுகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட தச்சன்தோப்பு பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்பாக திருடப்பட்ட மூன்று லட்சம் ரூபாய் பெறுமதியான ஆறு ஆடுகளில் ஐந்து ஆடுகளை நேற்று வெள்ளிக்கிழமை காலை துன்னாலையில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது கடத்தலுக்கு பயன்படுத் திய வாகனத்துடன் 28,23 வயது நிரம்பிய இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதி மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டுதலின் கீழ் சப் இன்ஸ்பெக்டர் மயூரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி மீட்பு மற்றும் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.